**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**

**2026ம் ஆண்டு மே மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 112/2014**

**CNR.No. TNDG03-001336-2014**

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம், திண்டுக்கல்,
குற்ற எண். 252/2012
சட்டப்பிரிவுகள் 454, 380 IPC ... குற்ற முறையிடுபவர்

/எதிர்/

கருணாகரன் (28/2013),
த/பெ. செல்வராஜ்,
யூனியன் ஆபிஸ் எதிர்புறம்,
சாணார்பட்டி,
திண்டுக்கல். ... எதிரி

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 112 of 2014 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Thadicombu PS. Dindigul in Cr.No.252/2012 |
| 3. | Name of the accused | Karunakaran |
| 4. | Father’s / Husband’s Name | S/o. Selvaraj |
| 5. | Occupation | - |
| 6. | Residence | Union office opposite, Sanarpatti, Dindigul. |
| 7. | Age | 28/2013 |

<table>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td>14.05.2012 at about 03.00 Hrs.</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td>14.05.2012<br>24.03.2014</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td>8.07.2013</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td>11.09.2013</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td>Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C.</td><td>03.06.2014</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td>On 06.06.2013 the accused questioned on substance of accusation U/s.454, 380 IPC Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td>15</td><td>Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>
<table>
<tr><th>Witnesses</th><th>Examined in – Chief</th><th>Examined - in Cross</th></tr>
<tr><td>PW1</td><td>17.11.2015</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>17.11.2015</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>30.08.2016</td><td>30.08.2016</td></tr>
<tr><td>PW4</td><td>30.08.2016</td><td>30.08.2016</td></tr>
<tr><td>PW5</td><td>30.08.2016</td><td>30.08.2016</td></tr>
<tr><td>PW6</td><td>05.08.2025</td><td>05.08.2025</td></tr>
<tr><td>PW7</td><td>25.11.2025</td><td>25.11.2025</td></tr>
<tr><td>PW8</td><td>17.02.2026</td><td>-</td></tr>
<tr><td>PW9</td><td>17.02.2026</td><td>-</td></tr>
<tr><td>PW10</td><td>12.05.2026</td><td>12.05.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td>19.05.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td>இறுதியாக, எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவுகள் இதச. 454, 380ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E-Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | Property order passed. |

இவ்வழக்கு 24.03.2014ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண். 112/2014 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கோபாலகிருஷ்ணன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 14.05.2012ம் தேதி பகல் 03.00 மணிக்கு திண்டுக்கல் MVM நகர், மேற்கு விஸ்தரிப்பு ஏரியாவில் இருக்கும் புகார்தாரரின் வீட்டை எதிரி பகலில் நோட்டமிட்டு சென்று கிரில் கேட் மற்றும் மரக்கதவை உடைத்து உள்ளே சென்று பீரோவை உடைத்து அதில் வைக்கப்பட்டிருந்த சுமார் 5 பவுன் தங்க நகைகளை திருடிச் சென்ற குற்றத்திற்காக எதிரிமீது இ.த.ச. பிரிவுகள் 454, 380ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பால் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பானை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் 03.06.2014 நாளன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 454, 380 இதச-ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக்கூறியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 454, 380-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து

விளக்கிக்கூறிய போது எதிரி குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

3. அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சான்று பொருட்கள் சா.பொ. வரிசை 1 முதல் 3 வரை ஆகும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இவ்வழக்கின் சம்பவம் பற்றி புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். கடந்த 14.05.2012ம் தேதி திண்டுக்கல் மாவட்டம், மாரம்பாடி கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முகாமில் கலந்துகொள்ள சென்றிருந்தபோது தனது மகன் சேது விக்னேஷ் என்பவர் தனக்கு போன் மூலமாக தங்கள் வீட்டின் கிரில் கேட் கதவு 2ம் உடைந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும், தனது மனைவிக்கு போன் பன்னி வரச்சொல்கிறேன் என்று சொன்னதாகவும், 4.30 மணியளவில் தானும் தனது மனைவியும் வீட்டிற்கு வந்து பார்த்தபோது, தங்கள் வீட்டில் வைத்திருந்த 2 செட் தோடு 2 பவுனும், 1 தங்கச் செயின் 2 1/4 பவுனும், தங்க நாணயம் 3 கிராமும், அங்கு வைத்திருந்த பணம் 27 ஆயிரமும் காணாமல் போனதாகவும், அதனால் தாடிக்கொம்பு காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தாகவும், புகார் கொடுத்த ஒரு வருடத்தில் காணாமல் போன பொருள் இருப்பதாக காவல் நிலையத்தில் இருந்து சொன்னதின் பேரில் தான் காவல் நிலையம் சென்று அடையாளம் காண்பித்ததாகவும், அதன்பின் தான் கனம் நீதித்துறை நீதிமன்றத்தில் மனுச் செய்து திருடுபோன நகைகளைப் பெற்றுக்கொண்டேன் என்றும், திருடுபோன நகைகளின் மதிப்பு ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் பெறுமானம் உடையது என்றும், புகார் அ.சா.ஆ.1 என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் சான்று பொருள் வரிசை எண்.1 முதல் 3 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரரின் மகன் தனது நீதிமன்ற சாட்சியத்தில் சம்பவம் குறித்தும் அ.சா.1க்கும், அ.சா.3க்கும் போன் மூலம் தகவல் சொன்னதாகவும், வீட்டிற்கு சென்று பார்த்தபோது, நகைகள் மற்றும் பணம் காணாமல் போயிருந்ததாகவும், அவரது அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரரின் மனைவி தனது நீதிமன்ற சாட்சியத்தில் நகைகள் திருடுபோனது குறித்து தன்னிடம் போன் மூலம் தனது மகன் தகவல் சொன்னார் என்றும், சென்று பார்த்தபோது, 4 1/2 பவுன் தங்க நெக்லஸ், 3 பவுன் தங்க வளையல், 2 பவுன் தோடும், இரண்டு 1/2 மதிப்பு தங்க நாணயம், பணம் ரூ.14,000/-மும் தனது கணவர் பீரோவில் இருந்த ரூ. 13,000/- பணமும், வெள்ளி குத்துவிளக்கு, வெள்ளி நாணயம் ஆகியவற்றும் திருடுபோயிருந்ததாகவும், காவல் நிலையத்தில்

அ.சா.1 புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் திருடு போனது சம்பந்தமாக போலிசார் கடந்த 14.05.2012ம் தேதி இரவு 09.10 மணிக்கு தனது வீட்டின் அருகில் வந்து விசாரணை செய்து கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், தன்னுடன் சேர்ந்து தனது பக்கத்துவீட்டுக்காரர் கையொப்பம் செய்தார் என்றும், பார்வை மகஜர் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியமளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது என்றும், தன்னுடன் சேர்ந்து தனது பக்கத்துவீட்டுக்காரர் பார்த்தசாரதி கையெழுத்து செய்தார் என்றும் அ.சா.4ஐ ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

8. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 14.05.2012ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 21.15 மணிக்கு தினகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.252/2012 சட்டப்பிரிவுகள் 454, 380 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், வழக்கினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் சமர்ப்பித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. புலன் விசாரணை அதிகாரி அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 14.05.2012ம் தேதி திண்டுக்கல் தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண். 252/2012 சட்டப்பிரிவுகள் 454, 380 இதச வழக்கினை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 22.30 மணிக்கு சாட்சிகள் பார்த்தசாரதி, கதிரேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார்செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 என்றும், பின்பு சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பின்பு பணி மாறுதல் காரணமாக வழக்குக்கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. அத்தாட்சி சாட்சியாக அ.சா.8 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகளைத் தெரியாது என்றும், தனது உறவினர் வீரையா என்பவரின் வீட்டில் நகை திருடுபோய் இருந்ததாகவும், அதனை கண்டுபிடித்துவிட்டதாக காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி அதன்பேரில் 07.07.2013ம் தேதி காவல் நிலையம் சென்று நானும் செல்லப்பாண்டியும் அடையாளம் காட்டியதாகவும், அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.5 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு அத்தாட்சி சாட்சியும் அ.சா.8ஐ அனுசரித்து சாட்சியம்அளித்துள்ளார்.

11. இவ்வழக்கின் இறுதி புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.10 அவரது சாட்சியத்தில் இவ்வழக்கினை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளை தேடிவந்த நிலையில் திண்டுக்கல் நத்தம் ரோடு சிறுமலைப்பிரிவு அருகே நான் போலிஸ் பார்டியுடன் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரி டி.வி.ஸ் TN 57 Q 8125 இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ஒருவரை நிறுத்தி விசாரிக்க அவர் பெயர் கருணாகரன் என்றும் அவரின் வாகனத்தை சோதனை செய்தபோது டேங்க் கவரில் வைத்திருந்த ஒரு மஞ்சள் பையை சோதனை செய்தபோது பூட்டை உடைத்து திருடுவதற்கு தேவையான கம்பிகள், ஆக்ஷா பிளேட், சிறிய கத்தி, சாவிக்கொத்து மற்றும் நகைகளை அடகு வைத்த ரசீதுகள் ஆகியவை காணப்பட்டதாகவும், அவரை விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக தாடிக்கொம்பு காவல் நிலைய குற்றத்துடன் தொடர்பிருப்பதை தாமாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றி நீதிமன்றத்தில் RPR.18/2014ன் படி ஒப்படைத்ததாகவும், பின்பு தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 454, 380 இதச ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 என்றும், அத்தாட்சி அ.சா.ஆ.8 என்றும், படிவம் 91 அ.சா.ஆ.9 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**IV.எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்**

12. அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவடைந்ததும்,

அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களைப் பற்றி எதிரியிடம் குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பில் பொய் வழக்கு போட்டுள்ளதாகவும் கூறினார். தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என்று கூறினார்.

**13.** எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**V.வாதுரைகள்**

**1. அரசுத்தரப்பு வாதம்**

14. இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.10 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும், அத்தாட்சி சாட்சிகள் அளித்த சாட்சியங்களின் அடிப்படையிலும், ஆவணங்களில் இருந்தும், அரசு தரப்பு வழக்கு உறுதியூட்டும் வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரியின் மீதான சட்டப்பிரிவுகள் 454, 380 இதசவின் கீழ் குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்கப்படவேண்டும் என அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

**2. எதிரி தரப்பு வாதம்**

**15.** இதற்கு மாறாக எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், எதிரி எந்த பொருளையும் திருடவில்லை என்றும், எதிரி மீது இவ்வழக்கு தவறாக பதியப்பட்டுள்ளதாகவும், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி வழக்குச் சொத்துக்கள் எதிரியிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டுள்ளது என அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை**

**16.** இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும், வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 454, 380 ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**VII) தீர்வு:**

17. அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 14.05.2012ம் தேதி பகல் 03.00 மணிக்கு திண்டுக்கல் MVM நகர், மேற்கு விஸ்தரிப்பு ஏரியாவில் இருக்கும்

புகார்தாரரின் வீட்டை எதிரி பகலில் நோட்டமிட்டு சென்று கிரில் கேட் மற்றும் மரக்கதவை உடைத்து உள்ளே சென்று பீரோவை உடைத்து அதில் வைக்கப்பட்டிருந்த சுமார் 5 பவுன் தங்க நகைகளை திருடிச் சென்ற குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 454, 380 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

18. இவ்வழக்கு தீர்ப்புரையை படிக்கும்போது சிரமமின்றி புரிந்து கொள்வதற்காகவும், விவாதம் செய்யப்பட்ட தலைப்பு மீண்டும் விவாதிக்கப்படாமல் தடுப்பதற்காகவும், இந்த தீர்ப்புரையானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- குற்ற நிகழ்வு
- கைது, ஒப்புதல் வாக்குமூலம், அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்
- புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

## VIII. குற்ற நிகழ்வு

19. மேற்சொன்ன குற்ற நிகழ்வு அரசு தரப்பால் சொல்லப்படும் இடத்தில் நடந்துள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பில் இருந்து குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.1 ஆன புகாரில், "எனது மூத்தமகன் சுமார் 03.30 மணிக்கு மாலையில்) வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வெளிகேட் பூட்டியபடியும், கிறில்கேட் மற்றும் மரக்கதவு உடைக்கப்பட்டு இருப்பதாகவும், பீரோக்கள் உடைக்கப்பட்டு இருப்பதாகவும், எனது மகன்

கூறினார். நான் வந்து பார்த்தபோது, எனது மகன் கூறியவாறு இருந்தது. வீட்டினுள் இருந்த பொருட்கள் சிதறிக்கிடந்தன. பீரோவில் இருந்த பணம் ரூ.27,000/-மும், வெள்ளை கல் பதித்த நெக்லஸ் 4 1/2 பவுன் கை வளையல்கள் -2, 3 பவுன் காது தோடுகள் 2 செட், 2 பவுன் 4 கிராம் எடை கொண்ட இரண்டு தங்க காசுகள் ஆக மொத்தம், 10 1/2 பவுன் தங்க நகைகளும், வெள்ளி குத்துவிளக்கு 150 கிராம், வெள்ளி டாலர் 30 கிராம் என்றும் மொத்தம் காணாமல் போன பொருட்களின் மதிப்பு ரூ.1,12,500/- என்றும் குறிப்பிட்டுள்ளது.

20. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்யும் போது, மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன. மேலும், இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் சம்பவத்தை தொடர்புடைய வகையில் சாட்சியமளித்துள்ளார்கள். மேலும், இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகள், சம்பவ இடத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கில் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜர் போன்றவற்றை பரிசீலனை செய்யும்போதும் மற்றும் இவ்வழக்கில் அத்தாட்சியின் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை பரிசீலனை செய்யும் போதும், சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட நகைகளைப் பரிசீலனை செய்யும்போதும், குற்ற நிகழ்வு நடந்துள்ளது என்பதை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. இருப்பினும் எதிரி தான் மேற்படி குற்ற நிகழ்வில் ஈடுபட்டவர் என்பதை நிரூபிப்பதற்கு எதிரியை கைது செய்து பின் அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதை பற்றி விரிவாக பார்க்க வேண்டியுள்ளது.

## IX. கைது ஒப்புதல் வாக்குமூலம் அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்

22. குற்ற நிகழ்வு நடந்த பின்பு எதிரியை கைது செய்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9ன் அடிப்படையில் போலீசார்கள் படிவம் 91 மூலம் அ.சா.ஆ.8 ஆக தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள வழக்குச் சொத்துக்களை கைப்பற்றி உள்ளனர்.

23. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசாரிடம் கொடுத்துள்ளதால் அதை வைத்து எதிரி தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார் என்று கருத இயலாது. மேற்படி குற்ற சம்பவத்தில் எதிரி தான் ஈடுபட்டுள்ளாரா என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு பார்க்கையில், அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.8 தனது முதல் விசாரணையில் "இவ்வழக்கின் எதிரிகளை எனக்குத் தெரியாது என்றும், எனது உறவினர் வீரையா என்பவரின் வீட்டில் நகை திருடுபோய் இருந்தது. அதனை கண்டுபிடித்துவிட்டதாக போலீசார் அடையாளம் காட்ட வரச் சொன்னதன்பேரில் 07.07.2013ம் தேதி காவல் நிலையம் சென்று அடையாளம் காண்பித்ததாகவும், அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.5 என்று" மட்டுமே சாட்சியமளித்துள்ளாரே தவிர, மேற்படி

எதிரியிடமிருந்துதான் அத்தாட்சியில் உள்ள பொருட்களை கைப்பற்றினார்கள் என்றோ, எதிரியை அடையாளப்படுத்தியோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை.

24. மேலும், மற்றொரு அத்தாட்சி சாட்சியான அ.சா.9 தனது முதல் விசாரணையில் "இவ்வழக்கின் எதிரிகளை எனக்குத் தெரியாது என்றும், எனது உறவினர் வீரையா என்பவரின் வீட்டில் நகை திருடுபோய் இருந்தது. அதனை கண்டுபிடித்துவிட்டதாக போலீசார் அடையாளம் காட்ட வரச் சொன்னதன்பேரில் 07.07.2013ம் தேதி காவல் நிலையம் சென்று அடையாளம் காண்பித்ததாகவும், அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.5 என்று" மட்டுமே சாட்சியமளித்துள்ளாரே தவிர, மேற்படி எதிரியிடமிருந்துதான் அத்தாட்சியில் உள்ள பொருட்களை கைப்பற்றினார்கள் என்றோ, எதிரியை அடையாளப்படுத்தியோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை.

25. ஆகவே, திருட்டு சம்பந்தமான குற்ற வழக்குகளில் அதிலும் எதிரியை அடையாளம் காண முடியாத வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் மற்றும் அத்தாட்சி சாட்சிகள் அளிக்கின்ற சாட்சியங்களை வைத்து மட்டுமே எதிரியின் குற்றச் செயலை அறிய முடியும். ஆனால் மேற்சொன்னவாறு அத்தாட்சி சாட்சியான அ.சா.8 மற்றும் அ.சா.9 வழக்கு பற்றி தெரியாது என்றும், எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டதாகவோ அல்லது அவர்கள் ஈடுபட்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ அல்லது எதிரியிடமிருந்து கைப்பற்றுதலைப் பற்றியோ, அத்தாட்சி தயார்

செய்யப்பட்டது பற்றியோ எந்த ஒரு சாட்சியமும் அளிக்காத நிலையில், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா? என்றும், அந்த சொத்துக்கள் அனைத்தும் எதிரியிடமிருந்துதான் கைப்பற்றபட்டதா? என்றும் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

**X. புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

26. மேலும், மேற்சொன்னவாறு மேற்படி சந்தேகத்தை புலன் விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணையின்மூலம், சாட்சியத்தின் மூலமும் தெளிவுபடுத்தினாரா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி, மேற்படி எதிரி குற்றச் செயலில் ஈடுபட்டு அவரிடமிருந்து தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதை உறுதியூட்டும் வகையில் எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், எதிரி போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளதால் அதை ஏற்புடைய சாட்சியமாக இந்நீதிமன்றம் கருத இயலாது. மேற்படி அனுமதிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் வழக்குச் சொத்தை கைப்பற்றுதலை மட்டுமே ஏற்புடைய சாட்சியமாக இந்நீதிமன்றத்தில் கருதமுடியும். ஆனால், அத்தாட்சி சாட்சிகள் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றும்போது, யாரிடமிருந்து கைப்பற்றியது பற்றியோ, அல்லது எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் வழக்குச் சொத்துக்கள்

கைப்பற்றப்பட்டது என்றோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், எதிரி வேறொரு வழக்கில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியபோது, புலன் விசாரணை அதிகாரி, எதிரி புகார்தாரரின் வீட்டிற்கு திருடவேண்டும் என்ற எண்ணத்தோடு, பதுங்கி, அத்துமீறி நுழைந்து வீட்டின் பூட்டை உடைத்து, மேற்சொன்ன குற்றச் செயலில் ஈடுபட்டார் என்றோ அல்லது எவ்வாறு எதிரியை அடையாளப்படுத்தி இவ்வழக்கில் சேர்த்துள்ளார் என்பதை தனது புலன் விசாரணை மூலம் உறுதியூட்டும் வகையில் எந்தவொரு விளக்கமும் அளித்து சாட்சியம் அளிக்கவில்லை.

27. ஆகவே, வழக்கின் எதிரிதான் மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டு அவரிடம் இருந்துதான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா? என்ற சந்தேகத்தைப் புலன் விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணை மூலம் உறுதியூட்டும் வகையில் சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. மேலும், இவ்வழக்கில் வேறு எந்த சாட்சிகளும் எதிரி தான் நகைகளை திருடினார் என்று நேரில் பார்த்ததாகவோ அல்லது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தபோது எதிரிடமிருந்து தான் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்று உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே, மேற்சொன்னவாறு சந்தேகம் உள்ளதால் எதிரி தான் வழக்குச் சொத்துகளை திருடினார் என்று கருத இயலாது.

29. ஆகவே, எதிரிதான் சம்பவ தினத்தன்று பதுங்கி புகார்தாரர் வீட்டிற்குள் சென்று புகார்தாரின் வீட்டின் கிரில்கேட் மற்றும் மரக்கதவை

உடைத்து, வீட்டிற்குள் சென்று பீரோவில் வைத்திருந்த வழக்குச் சொத்துக்களை திருடினார் என்பதை அரசு தரப்பில் இருந்து எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 454, 380 இன் கீழான குற்றச்சாட்டை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

30. இறுதியாக, எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவுகள் இதச. 454, 380ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

31. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட வழக்குச் சொத்துக்களான RPR No. 18/2014ல் உள்ள Item 1 முதல் 3 வரையிலான வழக்குச் சொத்துக்களை வழக்குச் சொத்தின் உரிமையாளர் Crl.M.P. No. 704/2014 நாள்.17.02.2014–ன் படி உத்தரவு பெற்று, ஏற்கனவே இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளதை மேல்முறையீடு காலத்திற்கு பின்பு மனுதாரர்/வழக்குச் சொத்தின் உரிமையாளருக்கு நிரந்தரமாக பாத்தியப்பட உத்தரவிடப்படுகிறது.

32. இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு

என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு மே மாதம் 21–ம் நாள் வியாழக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.21 18:25:31 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | தினகரன்<br>த/பெ. சேதுபதி செட்டியார் | 17.11.2015 | அ.சா.ஆ.1<br>சா.பொ.1<br>1முதல் 3<br>வரிசை |
| 2. | அ.சா.2 | சேதுவிக்னேஷ்<br>த/பெ.தினகரன் | 17.11.2015 | – |
| 3. | அ.சா.3 | காமுதாய்<br>க/பெ. தினகரன் | 30.08.2016 | – |
| 4. | அ.சா.4 | பார்த்தசாரதி<br>த/பெ. ராஜகோபால் | 30.08.2016 | அ.சா.ஆ.2 |
| 5. | அ.சா.5 | கதிரேசன்<br>த/பெ.வையாபுரி | 30.08.2016 | – |
| 6. | அ.சா.6 | ராமகிருஷ்ணன்<br>த/பெ. சக்திவேல் | 05.08.2025 | அ.சா.ஆ.3 |
| 7. | அ.சா.7 | தெய்வம்<br>த/பெ. பெரியசாமி | 25.11.2025 | அ.சா.ஆ.4 |
| 8. | அ.சா.8 | பாலு<br>த/பெ. முத்து | 17.02.2026 | அ.சா.ஆ.5 |
| 9. | அ.சா.8 | செல்லப்பாண்டி<br>த/பெ. பெருமாள் | 17.02.2026 | அ.சா.ஆ.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | அ.சா.9 | இளங்கோவன் ஜென்னிங்ஸ் த/பெ. எபி ஜான்சன் | 12.05.2026 | அ.சா.ஆ.7 முதல் அ.சா.ஆ.9 வரை |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 14.05.12 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.4 | 14.05.12 | பார்வை மகஜர் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.6 | 14.05.12 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.7 | 14.05.12 | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.8 | 07.07.13 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.9 | 07.07.13 | அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.10 | 07.07.13 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.10 | 07.07.13 | அத்தாட்சி |
| 9. | அ.சா.ஆ.9 | அ.சா.10 | 07.07.13 | படிவம் 91 |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்** – வரிசை 1 முதல் 3 வரை

**IV. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.21 18:25:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**<u>குறிப்பு:</u>**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இவ்வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
4. சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதியப்பட்டது.